DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No. 275/2019

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பானுசித்ரா | ஜாதி | : | -- |
| கணவர் பெயர் | : | சதீஸ்குமார் | தொழில் | : | தட்டச்சர் |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா/ மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.12.2024

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**1 வது எ.ம.த.கு.வி.:**

கேள்வி : நீங்கள் தற்பொழுது என்ன பணி செய்கிறீர்கள்?

பதில் : நான் சென்னை சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிகிறேன்.

கேள்வி : உங்கள் இறந்த சமயத்தில் நீங்கள் எங்கு குடியிருந்தீர்கள்?

பதில் : பி.சி பட்டி அரசு நகர்.

கேள்வி : உங்கள் கணவர் விபத்தில் இறந்த தேதி என்ன?

பதில் : 14.11.2016.

கேள்வி : நீங்கள் சம்பவத்தை நேரடியாக பார்த்தீர்களா?

பதில் : இல்லை.

கேள்வி : விபத்து நடந்த பிறகு உங்கள் கணவரை நீங்கள் எங்கு வைத்து பார்த்தீர்கள்?

பதில் : க.விலக்கு மருத்துவமனையில். 14.11.2016 அன்று இரவு சுமார் 11.30 மணிக்கு மேல்.

கேள்வி : உங்கள் கணவர் க.விலக்கு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டார் என்பதற்கான சான்றிதழ் எதாவது தாக்கல் செய்துள்ளீர்களா?

பதில் : சரியல்ல. ம.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்வி : இந்த வழக்கில் புகார் கொடுத்தவர் யார்?

பதில் : ஆனந்த் என்ற என் கணவருடன் பணிபுரிபவர்.

கேள்வி : நீங்கள் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.1, 15.11.2016 அன்று வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : 15.11.2016 அன்று அதிகாலை 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் கணவர் 14.11.2016 முதல் 15.11.2016 வரை எங்கு இருந்தார் என்பது பற்றி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பது பற்றி சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் கணவர் மது அருந்தி விட்டு வாகனத்தை இயக்கி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையை குறுக்கே கடந்த போது தான் அதனால் தான் விபத்து நடந்தது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் கணவர் தலை கவசம் அணியாமல் இருந்ததால் தான் தலையில் காயம் ஏற்பட்டது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : அந்த விபத்தில் உங்கள் கணவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறு காயங்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : சிறுகாயம் ஏற்பட்டதால் தான் அவர் உடனடியாக மருத்துவமனை சென்று சேரவில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து மறு நாள் வேறு இடத்தில் நடந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தான் உங்கள் கணவர் மரணம் அடைந்தார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : 14.11.2016 அன்று உங்கள் கணவர் சந்தித்த விபத்திற்கும் 15.11.2016 அன்று உங்கள் மருத்துவமனையில் அனுமதித்ததற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : 14.11.2016 அன்று ஏற்பட்ட வாகன விபத்தில் ஈடுபட்டதாக சொல்லக்

கூடிய TN 57 N 1758 பதிவெண் கொண்ட வாகனத்தை இயக்கிய ஓட்டுநர் சாலை விதிகளை கடை பிடித்து கவனமாகத்தான் இயக்கி வந்தார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து சமயத்தில் மது போதையில் இருந்த உங்கள் கணவர் எதிரே வந்த 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தை கவனிக்காமல் சாலையின் குறுக்கே கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக 22.02.2017–ம் தேதி மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் விடுவிக்கபட்டுள்ளதாக ம.த.சா.ஆ.–3 ல் உள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அதில் உங்கள் கணவருக்கு மேல் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படவில்லை என்று சொன்னால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : அதற்கு பிறகு சிகிச்சை அளித்ததற்கான படிந்துரை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்?

பதில் : சரிதான்.

கேள்வி : க.விலக்கு மருத்துவமனையிலிருந்து உங்கள் கணவர் சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்?

பதில் : எனக்கு தெரியாது.

கேள்வி : உங்கள் 22.02.2017–ம் தேதி வேலம்மாள் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் என்ன நடந்தது.?

பதில் : அதன்பிறகு மதுரை அண்ணா நகரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 7 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு நிலமை மோசமடைந்ததால் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க முடியாததால் தேனியில் சிகிச்சையளிக்க முயற்சி செய்தோம். பிறகு கம்பம் சாலையிலுள்ள தன்வந்தரி மூலிகை மற்றும் இயற்கை மருத்துவத்தில் சிகிச்சைக்கு சேர்த்தோம்.

கேள்வி : வேலம்மாள் மருத்துவமனையிலிருந்து வெளிவந்த பின்னர் உங்கள் கணவருக்கு சிகிச்சையளித்ததது சம்மந்தமாக தொடர்ந்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா?

பதில் : தெரியாது.

கேள்வி : தேனி தன்வந்தரி மருத்துவமனை என்பது தலைகாயத்திற்கான சிறப்பு மருத்துவமனை அல்ல என்றால்?

பதில் : தெரியாது.

கேள்வி : அங்கு எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார்?

பதில் : 17 நாட்கள்.

கேள்வி : உங்கள் கணவர் தன்வந்தரி மருத்துவமனையிலிருந்து பூரணமாக குணமடைந்து விட்டாரா அல்லது அங்கேயே மரணம் ஏற்பட்டதா?

பதில் : இல்லை. அங்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதால் வீட்டிற்கு கொண்டு செல்ல சொன்னார்கள். வீட்டிற்கு வந்த பிறகு 31.03.2017 அன்று இறந்துவிட்டார்.

கேள்வி : நீங்கள் தவறு என்றாலும் உங்கள் கணவர் தன்வந்தரி மருத்துவமனையிலேயே இறந்து விட்டார் என்றார்?

பதில் : சரியல்ல.

கேள்வி : தன்வந்தரி மருத்துவமனையிலிருந்து உங்கள் கணவர் விடுவிக்கப்பட்டதாக உள்ள ஆவணம் ம.த.சா.ஆ.6–ல் மருத்துவமனையில் இறந்துவிட்டதாக உள்ளது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : ம.த.சா.ஆ.12–ல் உங்கள் கணவர் தன்வந்தரி மருத்துவமனையில் இறந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் கணவர் வேலம்மாள் மருத்துவமனையிலிருந்து பூரணமாக குணமடைந்து தான் விடுவிக்கப்பட்டார் என்றால்?

பதில் : இல்லை.

கேள்வி : உங்கள் கணவருக்கு இருந்த பிற நோய்கள் காரணமாக பின்னிட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கும்போது இறந்து விட்டார் என்றாலும் அவர் மரணம் இயற்கையானது என்றாலும் ?

பதில் : தவறு

கேள்வி : உங்கள் கணவருக்கு ஏற்பட்ட விபத்தினால் தொடர் சிகிச்சையளிக்கபட்டு இறந்துவிட்டார் என்று உடற்கூராய்வு அறிக்கை தற்பொழுது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் கணவர் விபத்து சம்பவத்தின் போது இயக்கிய வாகனம் யாருக்கு சொந்தமானது ?

பதில் : அவருக்கு தான் சொந்தமானது.

கேள்வி : அதற்கான ஆர்.சி புத்தகத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் கணவர் வாகனத்திற்கான காப்பீட்டு சான்று எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்?

பதில் : இதுவரை தாக்கல் செய்யவில்லை.

கேள்வி : விபத்து சமயத்தில் உங்கள் கணவர் வாகனத்தின் காப்பீட்டு சான்று அமலில் இல்லை என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் கணவர் விபத்து சமயத்தில் எங்கு பணிபுரிந்தார் ?

பதில் : ஸ்ரீராம் பைனான்ஸ் பி.சி பட்டி.

கேள்வி : நீங்கள் பார்க்கும் அரசு வேலை டி.என்.பி.எஸ்.சி குரூப்–4 தேர்வு மூலம் வந்தது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் விதவை என்பதன் அடிப்படையில் தான் வேலை கிடைத்துள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : 14.11.2016 அன்று ஏற்பட்ட விபத்தினால் தான் உங்கள் கணவர் மரணம் அடையவில்லை என்பதால் 1–வது எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் உங்களுக்கு தர வேண்டியது இல்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் கேட்டிருக்க கூடிய இழப்பீடு தொகைகள் மிக அதிகமானது என்பதால் அதை 1–வது எதிர் மனுதாரர் வழங்க தேவையில்லை என்றாலும் ஆகையால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால்?

பதில் : சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.12.2024 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2024.12.20 19:03:36 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
20.12.2024.